# HDFC BANK

நான்கு தசாப்தங்களாக பல்வேறு நிதித் தீர்வுகள் ஊடாக இலங்கை மக்களின் வீட்டு கனவை நிறைவேற்றுவதோடு வர்த்தக சமூகத்தினருக்கு நிதி உதவிகளை அளித்து நாட்டின் நலனுக்காக தம்மை அர்ப்பணித்துள்ள வங்கியுடன் உங்களின் வங்கியியல் தொழிலை உயர் நிலைக்கு கொண்டு செல்வதற்கான அரியதொரு வாய்ப்பு கிட்டியுள்ளது.

HDFC வங்கியில் கீழ் காணும் பதவிகளுக்கு திறமையான, செயல்திறன் மிக்க சாதகமான நோக்கை கொண்டுள்ள விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

## முகாமையாளர் - உள்ளக கணக்காய்வு (தரம் III (1))
## MANAGER – INTERNAL AUDIT (Grade III (1))

**முக்கிய பொறுப்புகள்**

- கிளைகள் உட்பட வங்கியின் அனைத்துப்பகுதிகளிலும் கணக்காய்வு, விசாரணைகள் மற்றும் பிற பணிகளை திட்டமிட்டு திறம்படச் செய்தல்.
- ஆபத்து அடிப்படையிலான கணக்காய்வு எண்ணக்கருவினை புரிந்து கொள்ளல் மற்றும் வங்கித் தொழிலில் காணப்படும் நடவடிக்கைகள் தொடர்பான ஆபத்துகள் பற்றி அறிந்திருத்தல்.
- கணக்காய்வில், கணக்காய்வு குழுவினை மேற்பார்வை செய்து அதன் வளர்ச்சியினை பயனுள்ள விதத்தில் முகாமை செய்தல், குறித்த கால எல்லை அடையப் பெற்றுள்ளது என்பதனை உறுதி செய்தல், கணக்காய்வு நோக்கம், போதுமான அளவில் உள்வாங்கப்பட்டுள்ளது என்பதனை உறுதி செய்தல் மற்றும் கணக்காய்வு செயல் முறையுடன் ஒன்றித்து செயல்படல்.
- கணக்காய்வு அறிக்கைகளை தயாரித்தல் உட்பட சுயாதின கணக்காய்வு மற்றும் விசாரணைகளை பூர்த்தி செய்தல்.
- பிரதான உள்ளக கணக்காய்வாளரின் பணிப்புரைக்கு அமைவாக முறைமை தயாரிப்பு மற்றும் செயல்முறை விருத்தி உட்பட திட்டத்தின் ஏனைய விடயங்களில் திறம்பட பங்குபற்றல்.

**தகைமை அளவுகோள்**

- இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்தின் அங்கத்துவம் (ICASL)/ பட்டய சான்றளிக்கப்பட்ட கணக்காளர்களின் சங்கம் (ACCA)/ சான்றளிக்கப்பட்ட முகாமை கணக்காளர்கள் (CMA) / இங்கிலாந்தின் முகாமை கணக்காளர்களின் பட்டய நிறுவனம் UK (CIMA) அல்லது.

- நிதித் துறை அல்லது / கணக்கியல் / வணிகம் / வியாபார நிருவாகம் / முகாமைத்துவம் / பொருளியல் துறையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு பல்கலை கழகத்தில் இருந்து பெற்றுக்கொண்ட ஒரு பட்டம்
- வங்கித் துறையில் பூரண தொழில்சார் தகைமை காணப்படுவது மேலதிக நன்மையாக கருதப்படும்.
- நிதி சேவைப் பிரிவில் ஒரு முகாமையாளராக / உதவி முகாமையாளராக கடமையாற்றிய 05 வருட கால அனுபவம்.
- தகவல் தொழில்நுட்பத்தின் அடிப்படையிலான கணக்காய்வு அனுபவம் மேலதிக நன்மையாக கருதப்படும்.

- கணக்கீடு மற்றும் நிதி அறிக்கையிடல் நியமங்கள், மற்றும் இலங்கை மத்திய வங்கியின் பணிப்புரைகள் மற்றும் வழிகாட்டிகள் உட்பட ஏனைய சட்ட ரீதியிலான தேவைகள் பற்றிய பூரண அறிவு காணப்படல்.
- நிறுவனம் ஒன்றில் நிருவாக நடைமுறைகள் தொடர்பிலான சிறந்த அறிவு காணப்படல்.
- சிறந்த பகுப்பாய்வு விளக்கத்துடன் கூடிய எழுதும் திறன்.

**வயது எல்லை :** 45 வயதுக்கு உட்பட்டவராக இருப்பது விரும்பத்தக்கது.

சரியான விண்ணப்பதாரிகளுக்கு ஒரு கவர்ச்சிகரமான ஊதிய கொடுப்பனவு வழங்கப்படும்

## கணக்காய்வு உதவியாளர் (04 வருட நிலையான ஒப்பந்த அடிப்படையில்) -(03 வெற்றிடங்கள்) AUDIT ASSISTANT (04 YEAR FIXED TERM CONTRACT) – (03 VACANCIES)

**தகைமைகான் அளவு கோல்கள்**

- க.பொ.த (சாதாரண தரம்) பரீட்சையில் ஆறு பாடங்களில் சித்தியடைந்திருப்பதுடன் கணிதம் மற்றும் சிங்களம்/தமிழ் மொழி அடங்கலாக 5 திறமைச் சித்திகள் கொண்டவராக இருத்தல் வேண்டும்.
- க.பொ.த. (உ/த) பரீட்சையில் சித்தி, பொதுவான ஆங்கிலம் தவிர்த்து
- இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் பகுதியளவிலான தேர்ச்சி (CA Srilanka), இங்கிலாந்து முகாமை கணக்காளர்களின் பட்டய நிறுவனம் (CIMA-UK), இங்கிலாந்து பட்டய சான்றளிக்கப்பட்ட கணக்காளர்கள் (ACCA-UK) இலங்கை சான்றளிக்கப்பட்ட முகாமை கணக்காளர்கள் நிறுவனம் (CMA –SL) இலங்கை வங்கியாளர்கள் நிறுவனம் (IBSL).
- குறைந்தது 02 வருடகால கணக்காய்வு அனுபவம், வங்கித்துறை அல்லது நிதித் துறையில் அனுபவத்திற்கு முன்னுரிமை வழங்கப்படும்.
- M. S. Office Packages உபயோகிப்பதில் அறிவு
- சிறந்த பகுப்பாய்வு திறன் மற்றும் அறிக்கை எழுதும் திறன் இருக்க வேண்டும்.
- நாடு பூராகவும் உள்ள கிளைகளை பார்வையிடுவதற்கான விருப்பம்

**வயது எல்லை :- 30 வயதுக்கு கீழ்பட்டவர்கள் விரும்பத்தக்கது.**

சரியான விண்ணப்பதாரிகளுக்கு ஒரு கவர்ச்சிகரமான ஊதிய கொடுப்பனவு வழங்கப்படும்.

## தங்க சரிபார்ப்பு உத்தியோகத்தர் (ஆண்) – தரம் IV (03 வெற்றிடங்கள்) GOLD VERIFICATION OFFICER (MALE) – GRADE IV (03 VACANCIES)

### பிரதான பொறுப்புகள்

- தங்க ஆபரணங்களின் உண்மைத்தன்மையை அறிந்துகொள்ளுதல்
- தங்க ஆபரணங்களுக்கு சரியான பெறுமதி வழங்கப்பட்டுள்ளதென்பதை உறுதிப்படுத்தல்.
- தங்கக் கடன்களுடன் தொடர்புடைய கொள்கைகள், நடவடிக்கைமுறைகள், சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளை பின்பற்றுதல்
- வங்கியின் தங்க கடன் உடைமையை ஏற்புடைய கரட் பெறுமதியுடன் உறுதிப்படுத்தல்.
- தங்க ஆபரணங்களை சரிபார்ப்பதற்கு தொடர்ச்சியாக நாடெங்கிலுமுள்ள கிளை அலுவலகங்களுக்கு செல்ல வேண்டியது கட்டாயமாகும்.
- தங்க ஆபரணங்களை சீரான முறையில் காப்பு பெட்டகத்தில் இடப்பட்டுள்ளதை உறுதிப்படுத்தல்

**தகைமைகள்**

- க.பொ.த உயர் தரப் பரீட்சையில் 03 சித்திகளை பெற்றிருத்தல் (ஆங்கிலம் தவிர).
- அடகு தங்கக் கடனுடன் தொடர்புடைய துறையொன்றில் 05 ஆண்டு கால அனுபவத்தை கொண்டிருத்தல்.
- தங்க கடன் கணக்காய்வு நடவடிக்கைகள் தொடர்பான அனுபவத்தை கொண்டிருத்தல்.
- தங்க சரிபார்த்தல் தொடர்பாக அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் பெறப்பட்ட பயிற்சி சான்றிதழ் மேலதிக தகைமையாக கருதப்படும்.
- அனுபவத்துடன் தங்கத்தின் தரத்தை அறிந்து கொள்வதற்கான ஆற்றலை கொண்டிருத்தல்.
- MS Office தொடர்பான அறிவை கொண்டிருத்தல்.
- ஆங்கிலம் மற்றும் தமிழ் மொழியை கையாள்வதற்கான ஆற்றலை கொண்டிருத்தல்.

**வயதெல்லை : 45 வயதுக்குட்பட்டதாக இருத்தல் வேண்டும்.**

**கவர்ச்சிகரமான ஊதியங்களும் கொடுப்பனவுகளும் வழங்கப்படும்.**

## விண்ணப்பிக்கும் செயன்முறை

மின்னஞ்சலின் விடய வரிசையில் விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிட்டு 15.05.2024 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் careers@hdfc.lk என்ற மின்னஞ்சல் முகவரிக்கு உறவினரல்லாத இரு பரிந்துரையாளர்களின் விபரங்களுடன் விண்ணப்பங்கள் அனுப்பப்பட்டல் வேண்டும்.

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் திகதிக்கு கோரப்பட்டுள்ள தகைமைகள் மற்றும் அனுபவத்தை கொண்டிராத நபர்களுக்கு இந்த பதவிக்கு விண்ணப்பிக்க முடியாது.

ஏற்புடைய தகைமைகளை பூர்த்தி செய்யாத நபர்களின் விண்ணப்பங்கள் மற்றும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு பின்னர் கிடைத்த விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.

நேர்முகப் பரீட்சையின் போது ஏற்புடைய கோப்புகளின் மூலப் பிரதிகளை சமர்ப்பிப்பதற்கு தவறும் விண்ணப்பதாரிகள் எக் காரணத்தினாலும் மேற்படி பதவிக்கு சேர்த்துக்கொள்ளப்பட மாட்டார்கள்.

எந்தவொரு அழுத்தம் பிரயோகித்தலும் இப் பதவிக்கான தகைமை இழப்பாக கருதப்படும்.

ஆட்சேர்ப்புகளை பிற்போடுவதற்கான அல்லது ரத்துச் செய்வதற்கான உரிமை HDFC வங்கிக்கு உண்டு. தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் மாத்திரம் ஆட்சேர்ப்பு செயன்முறையின் அடுத்த கட்டத்திற்கு அழைக்கப்படுவார்கள்.

உதவிப் பொது முகாமையாளர் - மனித வளங்கள் மற்றும் நிர்வாகம்
HDFC வங்கி,
த.பெ. இல 2085,
சேர் சிற்றம்பலம் ஏ. கார்டினர் மாவத்தைஇ
கொழும்பு 02
தொலைபேசி இல - 0112 356800 - இணைய தள முகவரி : www.hdfc.lk